2015 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

வரும்போது நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோருடைய பெயரிலும் கவனம் இருக்கின்றன. எல்லா உறுப்பினர்களும் கொடுத்த கோரிக்கைகளும் என்னுடைய கவனத்தில்தான் இருக்கின்றன. ஆய்வில்தான் இருக்கின்றன. நான் வாய்ப்பு வருகின்றபோது எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஆறுமுகம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் recommend *செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்)*

6. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் நீங்கள் சொல்லுங்கள். அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்து மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழகத்தில் 62,015 ஹெக்டேர் பரப்பளவில் நீர்த்தேக்கங்கள், 2,65,642 ஹெக்டேர் பரப்பளவில் பெரிய மற்றும் நீண்ட கால நீர்ப்பாசன ஏரிகள், சிறிய மற்றும் குறுகிய கால ஏரிகள் மற்றும் குளங்கள், 56,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள கழிமுகங்கள், சதுப்பு நிலங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர்ப் பகுதிகள் உள்ளன.

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2015 ஆகஸ்ட் 31

தமிழ்நாட்டில் மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மூன்று வகைகளாக மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது.

(அ) மீன்பிடி உரிமம் வழங்குதல்

(ஆ) பங்கு மீன்பிடிப்பு

(இ) குத்தகைக்கு விடுதல்

(அ) மீன்பிடி உரிமம் வழங்குதல்:

மீன்பிடி உரிமம் நான்கு நீர்தேக்கங்களில் (திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி நீர்த்தேக்கம், சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணை, கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கொளவாய் ஏரி) உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட்டு மீன்பிடிப்பு நடத்தப்பட்டு வந்தது.

(ஆ) பங்கு மீன்பிடிப்பு:

மேற்கண்ட நான்கு நீர்நிலைகள் தவிர மீன் வளத் துறை கட்டுப்பாட்டில் உள்ள இதர நீர்த்தேக்கங்களில் உள்நாட்டு மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களடங்கிய பங்கு மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு மீனவர்களடங்கியது ஒரு பங்கு அலகாகும். மீன்பிடிப்பில் இருப்பு செய்யப்பட்ட மீன் இனங்களில் மூன்றில் ஒரு பங்கு என்ற அளவிலும், இருப்பு செய்யப்படாத மீன் இனங்களில் சரி பாதி அளவும் பங்கு மீனவர்களின் பங்காக மீன் வளத் துறையினரால் வழங்கப்பட்டது.

(இ) குத்தகைக்கு விடுதல்:

மதுரை, தேனி, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள ஏரி மற்றும் குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அரசாணை எண் 33, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 27–2–1995 மூலம் தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் மீன்பாசி குத்தகை பொது ஏலம்மூலம் மூன்றாண்டுகளுக்கு விடப்படுகிறது. இதில் உள்நாட்டு மீனவர் சங்கங்களும் கலந்துகொண்டு பயனடையலாம்.

2015 ஆகஸ்ட் 31] [திரு. கே.ஏ. ஜெயபால்]

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகப்படுத்தும்பொருட்டு மீன் வளத் துறையின் நேரடி கட்டுப்பாட்டிலுள்ள 53 நீர்த்தேக்கங்களை மீன் வள குத்தகைக்கு விடுவதற்கு தமிழக அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, அரசாணை எண் 165, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 25–9–2012–ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு நீர்த்தேக்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

அதன்படி 2012–2013 முதல் பொது ஏலம் நடத்தப்பட்டு, 35 நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை குத்தகை விடப்பட்டு, அரசுக்கு மொத்தம் ரூ.12.10 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. எஞ்சியுள்ள நீர்த்தேக்கங்களில் மீன்பாசி குத்தகையினை 2015–2016 ஆம் ஆண்டில் பொது ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுப் பணித் துறையின் அரசாணை எண் 16, நாள் 14–1–2011–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மீன் வளத் துறையின்மூலம் மீன்பாசி ஏலம் விடப்படும் நீர்த்தேக்கங்களின் மீன் வளக் குத்தகைமூலம் பெறப்படும் தொகையில் 50 விழுக்காடு குத்தகைத் தொகை பொதுப் பணித் துறைக்கு செலுத்தப்படுகிறது.

மீன்பிடி உரிமையைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைதாரர் இந்நீர்நிலைகளைச் சார்ந்த பாரம்பரிய மற்றும் பங்கு மீன்பிடிப்பு செய்யும் மீனவர்களைக் கொண்டே மீன் பிடித்திட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நீர்தேக்க மீன் வளம் குத்தகைக்கு அளிக்கப்படுவதால் இம்மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதுடன் மீன் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மீன்பாசி குத்தகையின்மூலம் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது ஒருவர்தான் பேச வேண்டும். திரு. ஆறுமுகம். (குறுக்கீடுகள்) பேசி முடியட்டும் பார்க்கிறேன், உட்காருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு நீர்நிலைகளில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன் உங்களை நான் கூப்பிடவில்லை. திரு. ஆறுமுகம் அவர்கள்தான் கவனத்தை ஈர்த்தார். (குறுக்கீடு)

[2015 ஆகஸ்ட் 31

திரு. எம். ஆறுமுகம்: இல்லை, நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை முன்மொழிந்திருக்கிறேன். அவ்வளவுதான்.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது ஒருவர்தானே கேள்வி கேட்க முடியும். அவர் கேட்டதற்குப் பின்னாலே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். திரு. ஆறுமுகம், அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நீங்கள் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொல்லி முடிக்கட்டும். வாய்ப்புக் கொடுக்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடி உரிமம் வழங்குதல், பங்கு மீன்பிடிப்பு மற்றும் குத்தகைக்கு விடுதல் என்று மீன்பிடிப்பு மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டு, 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர்ப் பகுதிகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்டகால பாசன ஏரிகள், சிறிய மற்றும் குறுகிய கால ஏரிகள் மற்றும் குளங்கள் அந்த வட்டாரத்திற்குட்பட்ட மீனவச் சங்கங்களுக்கு ஏலம் விடப்படவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயதரணி, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை முடியட்டும். வாய்ப்புத் தருகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: பாரம்பரிய மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்களுக்கு உரிமம் வழங்கப்படவில்லை என்ற புகார்கள் உள்ளன. மீன் குஞ்சுகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். நீர்நிலைகளான குளம், குட்டைகளில் ஆகாயத் தாமரை, கருவேல மரங்கள் வளர்ந்து வருவதால் மீன் குஞ்சுகள் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இவற்றைப் போக்கி உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதன்மீது கீழ்க்கண்ட கருத்துகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உள்நாட்டு மீனவர்கள் வாழ்க்கை

2015 ஆகஸ்ட் 31] [திரு. க. பாலகிருஷ்ணன்]

தமிழகத்திலே இருக்கின்ற ஏரிகள் மற்றும் நீர்நிலைகளை நம்பி அமைந்திருக்கிறது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே இருக்கின்ற உள்நாட்டு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து பல ஏரிகள், குளங்கள், நீர்நிலைகளிலே மீன்பாசி குத்தகை உரிமை எடுத்து வாழ்ந்து வருகிறார்கள். விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்ற வீராணம் ஏரி உள்ளிட்ட 4 நீர்நிலைகள் மற்றும் அனைத்து நீர்நிலைகளிலும் மீன்பாசி குத்தகை உரிமையை மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவேண்டுமென்ற கோரிக்கையுடன் தொடர்ந்து பலகட்ட போராட்டங்களை நடத்திவருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நீர்நிலைகளில் உள்ள மீன்பாசி குத்தகை உரிமையைப் பொது ஏலத்திற்கு விடுவது என்கின்ற அரசினுடைய முடிவு உள்நாட்டு மீனவர்களுக்கும், உள்நாட்டு மீனவர் சங்கங்களிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். குமரி மாவட்டத்திலே பல கூட்டுறவுச் சங்கங்கள், சுசீந்திரம் கூட்டுறவுச் சங்கம், தேரூர் தென்குமரி மாவட்ட கூட்டுறவுச் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, ஏலம் வழங்கப்பட்டிருக்கின்ற காலமான 30–6–2019 வரை அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று தடையாணையெல்லாம் பெற்றிருக்கிறார்கள். ஏறக்குறைய 188 குளங்களில் இருக்கின்ற மீன்பிடி உரிமையைக்கூட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் விவாதம் மாதிரி பேசுகிறீர்கள். சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அதனாலே அந்த மீன்பிடி உரிமையை இரத்து செய்கின்ற முறையிலே இந்த உத்தரவு அமைந்திருக்கிறது. பொது ஏலம் எடுப்பவர்கள் பாரம்பரிய மற்றும் பங்கு மீன்பிடிப்பு செய்யும் மீனவர்களை வைத்துத்தான் மீன்பிடிக்க வேண்டுமென்ற நிபந்தனை இருப்பதாகவும் விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் மீன்பிடிக்கின்ற உரிமை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இருக்கின்ற உரிமை பறிபோய், அந்த மீனவர்கள், வெறும் தொழிலாளர்களாக இருக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும். எனவே, இந்த அரசினுடைய ஆணையை இரத்து செய்து மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து நீர்நிலைகளிலும் மீன்பாசி குத்தகை உரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டு அமர்கின்றேன்.

[2014 பிப்ரவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது மீன் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற அவருடைய கருத்தை வெளியிட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக 1995 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோதுதான் மீன்பாசி ஏல முறையைக் கொண்டுவந்து உள்நாட்டு மீனவர்களுக்கு ஒரு வாழ்வாதாரத்தை உருவாக்கித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இன்றைக்கு மீன் உற்பத்தி 2 மடங்கு பெருகியிருக்கிறது என்ற தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்துவது எனது கடமை என்று கருதுகிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்போதுகூட உள்நாட்டு மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். மீன்பிடிப்பதில் மூன்று முறைகள் இருக்கின்றன. 1. ஆயிரம் ரூபாய் பணம் செலுத்தி லைசென்ஸ் பெறுவது 2. பங்கு 3. ஏல முறை. இந்த ஏல முறை என்பது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 14–1–2011 அன்று பொதுப் பணித் துறையால்தான் கொண்டு வரப்பட்டது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே மாவட்ட மீன் வள மேம்பாட்டு முகமையால் நடத்தப்பட்ட அந்த முறையை மாற்றி 14–1–2011 அன்று கடந்த ஆட்சியில் பொதுப் பணித் துறை மூலமாக அந்த மீன் ஏலம் விடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டில் எங்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லோருக்கும் பாதுகாப்பு அளிப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மீனவர்கள் பயன்படுத்தும் மீன் வலைகளுக்கு 50 சதவீதம் மானியம் கொடுப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, மீனவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இங்கு எல்லோருக்கும் பாதுகாப்பு

2014 பிப்ரவரி 13] [திரு. கே.ஏ. ஜெயபால்]

இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏரி மற்றும் குளங்களில் இருப்பு செய்கின்ற பெருவிரலி என்று சொல்கிற மீன் குஞ்சுகளுக்குக்கூட ஒரு ரூபாய் மானியம் தருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, பல்வேறு நிலைகளிலே உள்நாட்டு மீனவர்களுக்கான மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே தேரூர் தென்குமரி உள்நாட்டு மீனவர்கள் சங்கம், தோவாளை வட்ட உள்நாட்டு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கூட்டுறவு முனையம் ஆக இம்மூன்று சங்கங்களும் சேர்ந்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையிலே வழக்குத் தொடுத்திருக்கின்றன. பொதுப் பணித் துறையினுடைய அந்த அறிவிப்பிற்குத் தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, மீனவர்களுடைய நலன் காக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்ன சொல்ல வேண்டும் சொல்லுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பாக தலித் கிறிஸ்தவர்களுக்கும் சலுகைகள் வழங்க மத்திய அரசை வலியுறுத்தி மாநில அரசு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளது. நீங்கள் உட்காருங்கள். அதையெல்லாம் நீங்கள் இப்போது எழுப்ப முடியாது. (குறுக்கீடு) என்ன டாக்டர் கிருஷ்ணசாமி, நான் முன்பே உங்களுக்குச் சொல்லிவிட்டேனே? (குறுக்கீடு) அதையெல்லாம் சொல்ல முடியாது. நீங்கள் பேசும்போது எந்தப் பிரச்சினையை எழுப்பப் போகிறீர்கள் என்று*